# சமூக அரசு உருவாக்கம் ஒரு பார்வை

**ம. சுஜிதா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி)
நந்தனம், சென்னை

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7723

***ஆய்வுச்சுருக்கம்***

*சங்க கால மக்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்தும், பகுத்தும் தங்களது வாழ்வினை மேற்கொண்டனர். ஒவ்வொரு தனிமனிதனும் சமூக சூழ்நிலைகளை பொருத்தே தங்களது வாழ்வியல்களை மேற்கொள்கின்றான். இத்தகைய சங்க கால மக்களின் வாழ்வியலில் நிலமும் மக்களும், உழைப்பும் சமூகமும், விழாக்களும், சடங்குகளும், வழிபாடுகளும், குடும்ப அமைப்புகளும், அரசும் நிறுவனமயமாதலை நோக்கி நகர்தல் குறித்து இவ்வாய்வு கட்டுரை ஆராய்வது.*

## முன்னுரை

சமூக வாழ்வியல் பல்வேறுப்பட்ட சமூக செயல்பாடுகளுடன் இணைந்து மக்கள் வாழக்கூடிய வாழ்வியல் கூறுகளையும் உள்ளடக்கியதாக உள்ளது. சங்க கால சமூக அமைப்பு வாழ்க்கை நெறியின் நிலையினை மேம்படுத்துவதில் ஈடுபாட்டுடன் இருந்தனர். இச்சமூகச் சூழ்நிலையில் வாழும் மக்கள் தங்களுக்கு தேவையான வளமையையும் பொருளையும், இம் மண்ணிலிருந்தே பெறுகின்றனர். மண்ணை நம்பியே பழங்கால மக்களின் வாழ்வாதாரம் பெருக ஆரம்பித்து. இதன் பயனே நாளடைவில் ஒரு சமூகமாக உருவாகியது. மக்களின் அன்றாட செயல்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழும் வாழ்க்கையே நடத்தி வந்தனர். இவற்றில் குடும்பம், அரசு, நிலம், மக்கள், உழைப்பு, சடங்குகள் வழிபாடுகள் ஆகியவற்றை இச்சமூகத்தில் மக்கள் உருவாக்கி அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படும் பழக்கங்களை வளர்த்துக்கொண்டனர்.

## நிலமும் மக்களும்

சங்க காலத்தில் நாடு நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு பிரிக்கப் பட்டு, அந்நிலத்தின் வழியே மக்களும் தங்களின் வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டனர். இவ்வாறாக நிலத்தை ஒட்டி வாழ்ந்த மக்கள் மொழிக்கு மட்டும் இலக்கணம் வகுத்துக் கொள்ளாமல் தங்களின் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துக் கொண்டனர்.

பழங்காலம் தொட்டே பண்டைத்தமிழர் கடைபிடித்த வாழ்வியல் பண்பாட்டு முறைகளை ஒருதலைமுறையினர் அதன் அடுத்த தலைமுறையினருக்கு வழங்குவது கடமையாகும்.

உழவன் ஒரு நிலத்தைப் பயிரிட பயன்படக்கூடிய விளைநிலமாக மாற்ற மீண்டும் மீண்டும் உழுது பயன்படுத்துகின்றான். பண்டைத் தமிழர் நிலத்தின் இயற்கை அமைப்பு, இயற்கைச் சூழல், பருவகாலம் ஆகியவற்றிற்கேற்ப பாகுபடுத்தியுள்ளனர். உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாக நிலமே விளங்கியது. தமிழகத்தில் சிறந்த தொழிலாக வேளாண்மை விளங்கியது. பருவம் தவறாமல் பெய்யும் மழைநீரைத் தேக்கி கயம், வாவி, தடாகம், பொய்கை, குட்டம், குளம், ஏரி, கிடங்கு, மடு, மதகு, மடை போன்ற நீர்நிலைகளை உண்டாக்கி, அவற்றிலிருந்து தேவைக்கேற்ப நீரைப் பயன்படுத்தினர். ஒவ்வொரு குழுவும் நிலத்தைக் கையகப்படுத்தி பின்னர்அது தனி உடைமையாக மாறிய நிலையில் வேளாண்வர்க்கம் உருப்பெருகின்றது. புறநானூற்றுப் பாடல் ஒன்றில் தமிழகம் நால்வகை நில அமைப்பைக் கொண்டது என்பதை

**நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**(புற-187)**

**நாடு-மருதம், காடு-முல்லை,**
**அவல்-நெய்தல், மிசை-குறிஞ்சி**
**குறிஞ்சி-வேட்டைச் சமூக அமைப்பு**
**முல்லை-கால்நடைச் சமூக அமைப்பு**
**மருதம் -வேளாண் சமூக அமைப்பு**
**நெய்தல் -வணிக சமூக அமைப்பு**

உணவு தேடும் வாழ்க்கையிலிருந்து மானிட சமூகம் உணவு உற்பத்திக்கு மாறியது இந்த நிலப்பகுதியில்தான்.

வேட்டைச் சமூகத்தில் விளங்குகளை வேட்டையாடி அவற்றின் மாமிசங்களை எல்லோருமாக பங்கிட்டு உண்டு வந்ததை வரலாறு காட்டுகிறது.

**“தந்துநிரை பாதீடு உண்டாட்டுக் கொடை”” - (தொல்-நூற் 1004)**

தொல்காப்பிய நூற்பாவில் உள்ள பாதீடு என்னும் சொல்லாட்சி இனக்குழுக்களைப் பொதுவுடைமைச் சமூகத்தின் எச்சமாக விளங்குகின்றது. இனக்குழு வாழ்க்கைக்கு இன்றியமையாத பாதீடு பகிர்ந்துண்ணல் என்ற வழக்கம் இனக்குழு மக்களிடையே பொதுவுடைமையை ஏற்படுத்தியது. வேட்டையில் கிடைக்கக் கூடிய பொருள்களை அனைவரும் பகிர்ந்துண்டு மகிழ்ந்தனர்.

சமூகத்தில் அனைவரும் சேர்ந்தேதான் தேட வேண்டும். சேர்ந்தேதான் உண்ண வேண்டும். சமூகத்தில் தனிப்பட்ட யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது. மருத நிலத்தில் மண்வளமும், நீர்வளமும் மிகுதியாக இருந்தமையால் இப்பகுதி வேளாண் உற்பத்திக்கு ஏற்றவகையில் அமைந்தது.

## ஊர்

மக்கள் வாழுமிடம் ஊர்எனப்படும். பல சிற்றூர்களும், சில பேரூர்களும் இருந்தன என்பதை சங்ககால இலக்கியங்கள் மூலம் அறியலாம். மருதப் பாடல்களில் தலைவன் “ஊரன்”” என்றே சுட்டப்படுகின்றான்.

**வளம் கேழ் ஊர் (அகம் - 26)**
**பாய்புனல் ஊர் (அகம் - 116)**

என்றளவில் வருணிக்கப்படும் ஊர், தலைவனுக்கு உரிமையானது என்பதை அறியும்போது மருத நிலத் தலைவனின் வளமை புலப்படுகிறது.

## நகர்

பல ஊர்களுக்கும் மையப்படுத்தப்பட்ட இடமாக நகர் உருவாகியிருக்கலாம். ஊர் பண்பாட்டின் அடையாளமாக விளங்க, நகர்நாகரிகத்தின் சின்னமாக விளங்கியிருக்கலாம். உலகம் முழுவதுமே ஆற்றோரங்களில் நகரங்கள் உருவாகி நாகரிகங்கள் வளர்ந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பண்பாட்டை (Culture) என்றும், நாகரிகத்தை (Civilization) என்றும் ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். இவை இரண்டுமே தோன்றி வளர்ந்த இடம் மருத நிலப் பகுதியே.

**சேரி**

பலர்சேர்ந்து வாழும் இடமே சேரி எனப்படும். பார்ப்பைச் சேரி, வாணிகச் சேரி, ஊருக்குப் புறத்தே அமைந்த புறச்சேரி பற்றியெல்லாம் அறிகிறோம். நாளடைவில் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் குடியிருக்கும் இடமே சேரி எனலாயிற்று.

மருதப்பாடல்களில் பரத்தை குடியிருக்கும் இடம்சேரிஎனவும்,தலைவன்குடியிருக்கும் இடம் ஊர்எனவும் குறிக்கப்படுவதை நோக்கினால் இவ்விருவருக்குமான சமூக ஏற்றத்தாழ்வு புலப்படும்.

**மண்கனை முழவொடு மகிழ்மிகத் தூங்க**
**தண்துறை ஊரன் எம்சேரி வந்தென**
**(அகம்-76)**

ஊரையுடையதலைவன்எம்மைநாடிஎம் சேரிக்கே வருகிறான் என்று அழுத்தமாகக் கூறும் பரத்தை. அவ்வாறு தலைவனோடு தன்னை இணைத்துக் கூறிக் கொள்வதில் ஒரு விதப் பெருமித உணர்வை அடைகிறாள்.

**மக்கள் பிரிவினர்**

சமூகத்தில்விளைநில தொழில் பிரிவுகள் ஏற்பட்டன. இவையே சமூகத்தில் வெவ்வேறு கூறாக மாற்றி அமைக்கின்றது. ஒவ்வொரு தொழிற்பிரிவினரும் அவர்களின் தேவையையொட்டி வாழ்வியல் நிலைகளை நிலைநிறுத்திக்கொள்கின்றனர். பொருளாதாரத்தின் மூலம் மக்களின் வருவாயில் மாறுபாடுகள் ஏற்படுகின்றன. வருவாயை மிகுதி ஈட்டும் பிரிவினரை சிறப்புடனும், வருவாய் குறைவாக ஈட்டுபவரை குறைவுடனும் நடத்து வதிலேயே ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டன. அதையொட்டி மக்களும் பல பிரிவினராக வாழத் தலைப்பட்டனர். தொல்காப்பியர் சமூக ஏற்றத்தாழ்வுகள் குறித்துப் பல சூத்திரங்களில் கூறுகிறார். மற்றும் திணைப் பெயர்களைத் குலப்பெயர்கள் என்றும் தலைமக்கள் பெயர்கள் என்றும் பாகுபாடு செய்கின்றார்.

**இருவகைப் பிரிவும் நிலைபெறத் தோன்றலும்**
**உரியது ஆகும் என்மனார் புலவர்**
**(தொல் - 959)**

இந்நூற்பாக்கள் மக்களை உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று வகைப்படுத்துவதைத் காண்கிறோம்.

**உழைப்பும் சமூகமும்**

பண்டைய கால மக்கள் பெரும்பாலும் உழவுத் தொழிலையே சார்ந்திருந்த காரணத்தால் இவர்களின் உழைப்பு, உழவு, உற்பத்தி தொடர்பான உழைப்பாகவே இருந்தது.

**வேளாண் சமூகநிலை**

மற்ற நிலப்பகுதிகளில் (குறிஞ்சி, முல்லை) வாழ்ந்த மக்களின் வாழ்வியல் கூறுகளும் மருத மக்களின் வாழ்வியல் கூறுகளும் வேறுவேறாக இருந்தது. அவர்கள் வேட்டையாடியும், கால்நடைகளுடனும் நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

உழவுத்தொழிலை மேற்கொள்ளும் மக்கள் ஓரிடத்தில் தங்கியே தங்களின் தொழிலை பார்த்தனர். காட்டைத் திருத்தி கழனியாக்கினர். ஆற்றைத் திருப்பி நீரைத் தேக்கினர். வேளாண்மையில் ஈடுபட்டனர். தங்கள் நிலங்களின் அருகிலேயே ஊர்களை அமைத்து குடும்பமாக வாழத்தலைப்பட்டனர். உழவுத் தொழில் ஓரிரு நாட்களில் முடிவது அல்ல பல நாட்கள் பல மாதங்கள் காத்திருக்க வேண்டும். இங்கு உள்ளவர்கள் உற்பத்தி செய்த உணவு பொருட்களை தங்களுக்குள் பகிர்ந்துண்டு வாழ்ந்தார்கள். சிந்தையில் பொதுமையுணர்வும் தமக்கென்றும் தமது வழித்தோன்றல்களுக்கென்றும்சேர்த்துவைக்க எண்ணாத உயர்குணமும் அம்மகளிடையே இருந்தது.

உழவுத்தொழிலைக் கற்றுக் கொண்ட நாள்முதல் அதற்கு தேவையான நீரையும் சேமிக்க கற்றுக்கொண்டனர். உழவுத் தொழிலுக்கு இன்றியமைளாதது நீர்

என்பதை உணர்ந்தனர். ஆறுகளில் ஓடும் நீரைத் தடுத்து அணைகள் ஏரி குளங்களை உருவாக்கி நிரை சேமித்தனர். இதன் முலம் வேளாண்மையிலும் தமிழர்கள் சிறந்து விளங்கினார்கள்.

## விழாக்களும் சடங்குகளும்

பழங்கால மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவது விழாவும், சடங்குகளுமே மக்களின் நம்பிக்கையே அடிப்படையாக கொண்டு இவைகள் உருவாகின. ஆதிமனிதன் முதலில் இயற்கை சக்திகளை கண்டு வியந்து அதனை வணங்கழாயினான். இதன் மூலம் ஏற்பட்ட வளர்ச்சியே காலப்போக்கில் விழாக்களாகவும், சடங்குகளாகவும் உருப்பெற்றன.

## விழாக்களும் பண்பாடுகளும்

ஒரு நிலத்தில் நடத்தப்படும் விழாக்கள் அந்நிலப்பரப்பில் வாழும் மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவனவாய் இருக்கும். மக்களின் தனிப்பட்ட மகிழ்ச்சி, குடும்பத்தின் பங்களிப்பு, சமூதாயத்தின் குதுகலம் ஆகியவை விழாக்களின் குறிக்கோள் என்பது பொதுவான கருத்து. விழாக்கள் பெரும்பாலும் கோவில்களை மையமாகக் கொண்டு நடைபெற்றாலும், கூடிவாழும் சமூக அமைப்பு நடைமுறைகளுக்கும் அடித்தளமாக அமைகின்றன.

மனிதனின் செயல்கள் அனைத்தும் வாழ்வியல் காரணங்களை ஒட்டியே அமைகின்றன. இதில் உழகைசுகும் மக்களின் வாழ்வியல் துன்பத்தை போக்கி, இன்பத்தையும் மனமகிழ்வையும் தருவதாக இவ்விழாக்கள் அமைகின்றன. விழாக்கள் பெரும்பாலும் மக்களின் பொருளாதார நிலைகளைமையமாகக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகின்றன. இவ்விழாக்களில் பல ஊர்களிலிருந்தும் மக்கள் ஒன்று கூடுவதால் மக்களிடையே ஒற்றுமையும் உறவும் ஏற்படுகின்றன. மேலும் மக்களிடையே நல்லுறவும் விருந்தோம்பல் பண்பும், தெய்வம் பரவலும் முதன்மை பெறுகின்றன. இவற்றோடு கலைகளில் கலை ஆர்வமும், வியாபார நோக்கும் மறைபொருளாகக் காணப்படுகின்றன. மக்கள் தாங்கள் நினைக்கின்ற காரியங்கள் நன்கு நடைபெறுவதற்கும் தெய்வங்களை தனியாகவும், சமூகத்துடனும் சேர்ந்து வழிபடுகின்றனர்.

## இந்திரவிழா

மக்கள் மழையை நம்பியே வாழ்க்கையை நடத்துகின்றனர். அத்தகைய மழையை வேண்டி இந்திரனுக்கு விழா எடுத்தனர்.

**இந்திர விழவிற் புவின் அன்ன (ஐங்-621)**

ஏன வரும் ஐங்குறுநூற்றுத் தொடரால் அறியலாம்.

இவ்விழா இருபத்திஎட்டு நாட்கள் நடைபெற்றது என்று சிலப்பதிகாரமும், மணிமேகலைக் காப்பியங்களும் தெரிவிக்கின்றன.

## விளக்கிட்டு விழா

வீடுகளிலும் வீதிகளிலும் விளக்கேற்றி மாலைகளைக் கட்டிக் கொண்டாடிய விளக்கேற்று விழாவும் அந்நாளில் கொண்டாடப்பட்டது. மழை நீங்கிய பருவத்தில் சந்திரன் அறுமீனாகிய கார்த்திகையோடு சேறும் நாளில் இவ்விழா நிகழ்ந்தது. இருள் செறிந்த நடுநாளில் இவ்விழா நிகழ்ந்ததாகக் கூறப்படுதலின் இது இக்காலத்தில் கொண்டாடப்படும் தீபாவளியையொத்த விழாவாகலாம் என்பர் பேரா.மு சண்முகம்பிள்ளை.

## சிறுதெய்வ வழிபாடு

பண்டைய காலமக்கள் தாங்கள் வாழும் ஊர்களிலுள்ள எல்லோரும் கூடும் மன்றங்கள் தாம் வாழும் இல்லங்களிலும் சிறுதெய்வங்களை வணங்கி வந்தனர். நாட்டுப்புறங்களில் வாழும் உழைக்கும் மக்களின்வழிபடு தெய்வம், காளி, கருப்பன், மாடன் போன்ற சிறு தெய்வங்களை வழிபடலாயினர்.

### பொங்கல்

இது தைத்திங்களில் கொண்டாடும் விழாவாகும். முதற்கண் அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின்னர் வளத்தை குறித்த விழாவாக மாறியது.

### வெறியாட்டு விழா

பண்டைய நாளில் பெரு வழக்காக இருந்தது வெறியாட்டு விழாவாகும். முருகனுக்காக எடுக்கப்பட்ட இவ்விழாவில் வேலன் கையில் வேலேந்தி ஆடுவான். திணைபயிரையையும் மலர்களையும் தூவியும், ஆட்டுக்கிடாயை அறுத்துக் குருதியை சிந்துவர். ஊர்தோறும் இவ்விழாவினைக் கொண்டாடினர். இதனையே வேலன் வெறியாட்டு விழா என்றும் அழைக்கும் வழக்கமும் இருந்தது.

### சடங்குகள்

தமிழர்களின் பண்பாட்டில் தெய்வம் பற்றிய நம்பிக்கைகள் இருந்தன. அந்நம்பிக்கைகளே பின் நாளில் சடங்குகளாக உருப்பெற்றன. இச் சடங்குகளை செய்வதன் முலம் நல்லதே நடக்கும் என்றும் நம்பினார்கள்.

### மழைச்சடங்கு

உழவர்களுக்கு நீர்நிலைகளே வாழ்வியல் ஆதாரமாக இருந்தது. ஆகையால் நீருக்கு ஆதாரமாக உள்ள மழையை வணங்கி போற்றினர். இதனால் மழைவேண்டி சில சடங்கு முறைகளையும் செய்தனர். சங்கு, நண்டு, வாளை போன்றவற்றை நீர் நிலைகளில் போட்டு மழையை வேண்டினர். இப்பொருட்கள்நீரோடு தொடர்புடையது. சங்கு, சிப்பி போன்ற பொருட்களுக்கு நீரை வரவழைக்கும் இயல்பு உண்டு என்ற நம்பிக்கையில் செய்தனர். கொடும்பாவி கொளுத்துதல், மழைக் கஞ்சி காய்ச்சுதல் போன்ற சடங்கு முறைகளும் செய்யப்பட்டன.

**மாமழை, போற்றுதும் மாமழை போற்றுதும்**
**நாமநீர்-வேலி யுலகிற்கு அவன் அளிபோல்**
**மேல்நின்று தான்அரத்த லான்.**

***(சிலப்-1:1-9)***

“கடல் சூழ்ந்த இந்த உலகிற்கு நிர்வளம் அருள்வதால் அந்த மழையை போற்றுவோம்””

### மழைக்கஞ்சி காய்சுதல்

ஊரில் உள்ளபெண்கள் அனைவரும் வீடுவிடாக சென்று அரிசி, மாவு தானியங்களைப் பிச்சையாக பெற்று வந்து ஊரின் பொது இடத்தில் வைத்து உப்பில்லா கஞ்சியை காய்ச்சி, ஊர்மக்கள் அனைவருக்கும் வழங்குவர். பிறகு வயது முதிர்ந்த பெண்கள் கஞ்சி காய்ச்சிய சட்டிகளை கீழே போட்டு உடைத்து மாரடித்து ஒப்பாரி பாடுவர்.

**மானத்த நம்பியல்லோ**
**மக்களைத்தான் பெத்தோமையா**
**மக்களைத்தான் காப்பதற்கு**
**இப்போமழை பெய்யவேணும்**
**மழைக்குவரம் கேட்டு நாங்க**
**மருகுகிறோம் சாமி.**

என்று ஒப்பாரி பாடிக் கொண்டே சுடுகாட்டிற்குச் செல்வர். சுடுகாட்டிற்கு செல்வோரை ஏனைய பெண்கள் வழிமறித்து மழைபெய்து விடும் நம் பஞ்சமெல்லாம் தீர்ந்து விடும் வாருங்கள் என்று கூறித் திரும்ப அழைத்து வருவர். அன்றோ அடுத்த நாளோ மழை பெய்யும்.

### விதைப்பு சடங்கு

விதைப்புக்குமுன் மந்திர உச்சாடனம் செய்தனர். திருமுருகாற்றுப்படை விவரிக்கும் வேலன் வெறியாடல் விதைப்புக்கு முந்திய சடங்காக செய்யப்படுகின்றது. பலியிட்ட மறியின் குருதியில் விதையைத் தோய்த்து விதைத்தால் நன்கு வளரும் என்பது நம்பிக்கை.

### திருமணம்

பெண்ணையும் ஆணையும் இணைத்து ஒன்றாக இல்லத்தில் ஈடுபட வைக்கும் திருமண நிகழ்வு சமுதாயத்தில் பலரறிய செய்யப்பட வேண்டியது எனக் கருதப்படுகிறது.

**நேர் இறை முன்கை பற்றி, நுமர்தர**
**நாடு அறி நன் மணம் அயர்கம்**
**(குறிஞ்சி-231)**

என்னும் தொடர்முலம் அறியலாம். சங்ககாலச் சமுதாயம் சமயம் சார்ந்த இருந்ததாகத் தெரியவில்லை. பெரிதும் போர்க்காலச் சமுதாயமாகவே இருந்தது. அன்றாட நிகழ்வுகளுக்கும், உலகியல் இன்பங்களுக்கும் தேவைகளுக்கும் மதிப்பக் கொடுத்து அவற்றை ஒட்டியே அவர்கள் வாழ்க்கை முறைகளும் அமைந்திருந்தமையால் அவர்கள் திருமணச் சடங்கு முறைகளை அமைத்துக் கொண்டனர்.

அகத்திணை காதல் வாழ்க்கையைக் களவு, கற்பு என இரு வகையாகக் காண்கிறது. ஊரறியாத வகையில் வயது வந்த ஆணும், பெண்ணும் புணர்ந்து இன்புறும் பகுதி களவெனப்பட்டது. துமறிய - ஊரறியத் திருமணம் செய்து கொண்டு வாழும் வாழ்வு கற்பு வாழ்வாகும்.

**“கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
**கோளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்**
**கொள்வதுவே”**

என்றார் தொல்காப்பியர். எனவே களவு கற்பாக முடிய வேண்டும் என்பதே நோக்கமாகும்.

## பொருத்தம் பார்த்தல்

தம் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் திருமணம் செய்ய விரும்புவார் பொருத்தம் பார்த்து நற்காரியங்களை செய்வர்.

## பரிசமளித்தல்

பெண்ணுக்கு மணமகன் பரிசமளிக்கும் வழக்கம் தொன்றுதொட்ட தமிழர் மரபாகும். அன்றுஇது முலைவிலை, சிறுவளைவிலை, பரியம் என்று அறியப்பட்டது. பாசிழை விலையென்றும் பெயர் உண்டு.

**“சிறுவளை விலையெனப் பெருந்தேர்**
**பண்ணிஎம்**
**முன்கடை நிற்இச் சென்றிசி னோனே”**
**(நற்-300)**

## திருமணச்சடங்குகள்

பழங்கால தமிழ்ச் சமுதாய மக்க ளிடையே எவ்வித திருமணச் சடங்கும் இருந்திருக்க முடியாது. சமூகம் ஒழுங்குற்றுப் பல்வேறு குலப் பிரிவுகள் தொழிலடிப்படையில் தோன்றிய பிறகு சில வரையறைகளை மேற்கொண்டனர் எனலாம். தொல்காப்பியர் இத்தகைய நிலையைச் சுட்டுகின்றார்.

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஜயர் யாத்தனர் கரணம் என்ப”**
**(கரணம்-மணச்சடங்கு)**

இச்சூத்திரத்தில் ஜயர் என்ற சொல்லைப் பிராமணர் என்பவரே இச் சடங்கை இயற்றினர் என்றார் வரலாற்றறிஞர் திரு.கே.ஏ நீலகண்ட சாத்திரியர் அவர்கள். பழங்காலத்தில் ஜயர் என்னும் பிரிவினர் இல்லை. ஜயன் என்றால் தலைவனை குறிக்கும் சொல்லாகவும், ஜயனார் என்ற சொல் ஊர் தலைவன் அல்லது கடவுளை சொல்லாக பயன்படுத்தினர். அவன் இவன் என்ற சொல்லில் இல்லாமல் அவர் என்ற உயர்வு குறித்த சொல்லை முன்னிலை படுத்திபயன்படுத்தினர். அக்கால திருமணங்கள் அவ்வுரின் தலைவர்களை முன்னிலை படுத்தியே நடத்தினார்கள். ஆகவே திரு நீலக்கண்ட சாஸ்திரியர் கூறியது போல் இன்று நாம் காணும் ஜயரை குறிப்பதாக இல்லை. ஜயர் என்னும் சொல் உயர்ந்தோர் மூத்தோர் ஆகியோரைக் குறித்தது. பெண்ணின் பெற்றோர் கொடுக்க மணமகன் ஏற்றுக்கொள்வதே கற்பு வாழ்வின் தொடக்கமாக இருந்தது. உழுத்தம் பருப்படன் கூட்டிச் சமைத்த குழைவான பொங்கலை விருந்தினர்க்குப் பரிமாறினர். வரிசையாக கால்களை நிறுத்தி அமைக்கப்பட்ட பந்தலில் மணலைப் பரப்பி, விளக்குகளை ஏற்றி மாலைகளை தொங்கவிட்டனர். முன்னே தருவனவற்றையும் பின்னே தருவனவற்றையும் முறையாகத் தந்தனர். தேமல் படர்ந்த அழகிய வயிற்றை உடைய மக்களை ஈன்றெடுத்த மகளிர் நால்வர் கற்பிலிருந்து வழுவாது, பலவற்றினும்

உதவியாய் இருந்த, நின்னை மனைவியாகப் பெற்ற நின் கணவனைப் பேணிக் காக்கும் பெரும் விருப்பினை உடைய ஆகுக எனக் கூறி வாழ்த்தினர். நீரோடு கலந்த குளிர்ந்த இதழ்களை உடைய மலர்களை நெல்லோடு கலந்து அவளுடைய அடர்ந்த கரிய கூந்தலில் தூவினர். இவ்வாறாக வதுவை மணம் முடிந்தது. சுற்றத்தினர் ஆராவாரத்துடன் சூழ்ந்து நின்று வாழ்த்தினர்.

### குடும்பம்

ஆண், பெண் உறவானது அனைத்து உயிர்களின்னும் தனிப்பட்டு விளங்குகின்றது. ஏனெனில் மனிதன் மட்டுமே வாழ்வை நெறிப்படுத்தி வாழக் கற்றுக் கொண்டான். மனிதன் தன்னுடைய தேவைகளை நிறைவு செய்து, தன்னுடைய வழித்தோன்றல், உடைமை போன்றவற்றை வளர்த்துக் கொள்வதற்கும், பிறருக்கு எடுத்துக்காட்டாக இருந்து அறநெறிகளைச் சுற்றத்தாருடன் பகிர்ந்து கொள்ளவும் ஏற்படுத்திக் கொண்ட ஒரு அமைப்பே குடும்பம் எனப்படும். குடும்பம் இல்லையென்றால் தலைமை இல்லை. குடும்பம் என்ற அமைப்பு பெண்ணிற்கு பாதுகாப்பானதாகவும், அதே நேரத்தில் போரியல் சார்ந்த அரசியலுக்கும், அடுத்த தலைமுறை வளர்வதற்காக குடும்பம் என்ற நிறுவனம் வலிமையானதாக உருவாக்கப்பட்டது. பலர் முன்னிலையில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழத் தலைப்படும் திருமணமே குடும்ப தோற்றத்திற்குக் காரணம் எனலாம்.

குடும்பம் எல்லாச் சமூகங்களிலுமுள்ள அடிப்படையான அமைப்பு. இக் குடும்பத்தின் மூலமே உறவு ஏற்படுகிறது. “இரத்த உறவுமுறைகளும் பிற உறவுகளும்”” என்ற நூலை எழுதிய மார்கன் என்ற மானிடவியலறிஞர் குடும்பம் பற்றி விளக்கும்போது “குடும்பம்”” என்பது இயக்கமுள்ள சித்தாந்தத்தையே குறிக்கிறது. அது என்றைக்கும் இயங்காதிருப்பதில்லை. சமுதாயம் கீழ்நிலையிலிருந்து மேல் நிலைக்கு முன்னேற முன்னேற அதுவும் கீழான வடிவத்திலிருந்து மேலான வடிவத் திற்கு முன்னேறிச் செல்கிறது என்கிறார்.

மணமான கணவன் மனைவி இருவரும் தம் மக்களுடன் சேர்ந்து வாழ்வதே குடும்பம் எனப் பொதுவாகக் கொள்ளப்படுகிறது. தமிழிலக்கியத்தில் குடும்பம் என்ற சொல்லை முதன் முதலாகக் கையாள்கிறவர் திருவள்ளுவரே. சங்க இலக்கியத்திலோ, தொல்காப்பியத்திலோ குடும்பம் என்ற சொல் இடம்றெவில்லை. மனை, இல், இல்லம், குடி, ஆகிய சொற்கள் குடும்பம் என்ற பொருள் தருவதாகக் கொள்ள முடிகிறது. குடும்ப இயலையே கற்பியல் என்றார் தொல்காப்பியர்எனக் கருதலாம்.

### தாய்வழிச் சமூகத்தில் குடும்பம்

தொடக்கக் காலத்தில் உலகம் முழுவதுமே தாய்வழிச் சமூக அமைப்பே நிலவி வந்ததாகச் சமூகவியல் அறிஞர்களும், வரலாற்றாய்வாளர்களும் அறிதியிட் டுரைத்துள்ளனர். அந்நிலையில் பாலியல் உறவில் எவ்வித ஒழுங்கும், கட்டுப்பாடும் அம்மக்களிடம் இருந்ததில்லை. திருமணம், குடும்பம் என்ற அமைப்பும் இல்லை. ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே வெறும் பாலினத் தொடர்பு மட்டுமே இருந்தது. பாலினத் தொடர்பு முடிந்தவுடன் இருவரும் எந்தவிதப் பந்தமுமின்றிப் பிரிந்தார்கள். பிறந்த குழந்தை தாயிடமே நெடுங்காலம் வளர்ந்தது. இத்தகு நாடோடி வாழ்வில் மக்கள் கூட்டம் கூட்டமாக வாழத்தலைப்பட்ட நிலையில் பெண்ணே அக்கூட்டத்திற்குத் தலைவியாக இருந்தாள். வரலாற்றறிஞர் ராகுல சாங்கிரித்தியாயன் “வால்காவிலிருந்து கங்கை வரை”” என்ற தமது நூலில் இவற்றைப் பதிவு செய்துள்ளமையைக் காணலாம்.

பழந்தமிழரிடம் தாய்வழிச் சமூகமுறை இருந்தமைக்கான சான்றுகள் சங்க

இலக்கியக் குறிப்பில் வெளிப்படையாகப் பதிவாகவில்லை யென்றாலும் இலைமறைகாயாகச் சில சான்றுகள் இடம் பெற்றுள்ளன. தமிழ் மக்களின் அகவாழ்வைப் படம்பிடித்துக் காட்டும் அகப்பொருள் இலக்கண, இலக்கியங்களில் கூற்றுக்குரியவர்களாகத் தாய், செவிலி, தோழி, பாங்கன் முதலானோரைப் பட்டியலிடுகின்றன. தந்தைக்கும் தனையனுக்கும் கூற்றுகள் இல்லை.

### தந்தைவழிச் சமூகத்தில் குடும்பம்

வேட்டையாடித் திரிந்த மனித இனம் மெல்ல மெல்ல ஆடுமாடுகளை பழகினர். முதல் நாகரிக அடையாளங்கள் தோன்றத் தொடங்கின. ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் மாடு செல்லமாக குழுவின் பொதுச் சொத்தாக விளங்கியது. சமுதாயத்தில் வேலைப் பாகுபாடுகள் ஏற்பட்டபோது முன்னர் குடும்பத்தின் தலைவியாக இருந்த நிலையைப் பெண் இழந்தாள்.

தொல்காப்பியர் காட்டும் குடும்பம் தந்தை வழி சார்ந்தது. ஆண் மகனே குடும்பத் தலைவனாக இருந்து ஆட்சி புரிகிறான்.

**“பெருமையும் வரனும் ஆடூஉ மேன”"**

**(தொல்-1041)**

எனக் குறிப்பதற்கேற்ப ஆண் தலைமைச் சிறப்பு பெற்றிருந்தான். மாறாகப் பெண்ணோ அச்சமும், நாணமும் நிரம்பியவளாகக் குறிக்கப் பெறுகிறாள்.

**அச்சமும் நாணம் மடனும் முந்துறுதல்**
**நிச்சமும் எண்பாற்கு உரிய என்ப**

**(தொல்-1042)**

குடும்ப வாழ்வு குழந்தையின்றி முழுமை பெறுவதில்லை என்பதும் சான்றோர் கொள்கையாக இருந்தது. மக்கட் பேற்றின் இனிமையை வள்ளுவத்தின் வழிக் காண்க.

**குழலினிது யாழினிது தென்ப தம்மக்கள்**
**மழலைச் சொற் கேளாதவர்.**

### அரசும் நிறுவனமயமாதலும்

மனிதன் சமூகமயமாதலின் சமுதாய அமைப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. மக்கள் வளர்ந்து வரும் காலக்கட்டத்தில் இச்சமூக அமைப்பை சீராக கொண்டு செல்ல அரசும் சமுதாய அமைப்பும் தேவையானது. புதிய சமுதாயத்தில் அரசு தோன்றி, உழுவித்து உண்போரது வர்க்கக் கருவியாகச் செயல்படுகிறது. இதன் தலைவன் அரசன். இவ்வாறு தோன்றிய அரசு தனது நிலைத் திருத்தலுக்கான தேவையை ஒட்டிப் படிப்படியே ஒரு நிறுவனமாக உயர்ந்தது.

### அரசு

அரசு ஆதிகாலத்திலிருந்து வந்ததல்ல. அது இல்லாமலேயே சமுதாயங்கள் இருந்து வந்துள்ளன. அச்சமுதாயங்களுக்கு அரசு பற்றியோ, அரசு அதிகாரம் பற்றியோ ஒன்றும் தெரியாது. பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுபடுவதுடன் இது அவசியகரமாகப் பிணைக்கப்பட்டிருந்தது. இப்பிளவின் காரணமாக அரசு அவசியமாகிவிட்டது என எங்கெல்ஸ் குறிப்பிடுகிறார்.

பல கூட்டங்களின் உழைப்பு, பல கூட்டங்களின் இணைப்பு இதனை ஒழுங்குபடுத்துவதே அரசு. குழுக்களை பாதுகாத்தல், அதனை மேம்படுத்துதல், உற்பத்தியை பெருக்க வழிவகை செய்தல், வணிகத்தை மேம்படுத்துதல், படைப்பிரிவுகளை வலிமையானதாக உருவாக்குதல், மக்களை பாதுகாத்தல், இவற்றையெல்லாம் ஒழுங்குற அமைப்பதே ஒரு தலைசிறந்த அரசின் கடமையாகும். அரசு என்பது பெரும் மதிப்பு மிகுந்த பொருளை எதிர்கால போரியல் சமகால வாழ்வியலில் மக்களுக்கு தேவை என்ன என்பதை அறிந்து வழங்குவது அரசு.

தமிழகத்தை பொருத்தவரையில் குறிஞ்சி நிலத்தில் அமைந்த வேட்டைச் சமூக அமைப்பிலோ, முல்லை நிலத்தில் ஏற்பட்ட கால்நடைச் சமூக அமைப்பிலோ அரசுகள் தோற்றம் பெறவில்லை. மாறாக இனக்

குழுத் தலைவர்கள் பலர்தோன்றி மக்கள் மத்தியில் செல்வாக்கும் பெற்றுள்ளனர். ஆனால் மருத நிலத்தில் உருவான வேளாண் சமூக அமைப்பில் எங்கே கூடுதல் உற்பத்தி அமைகிறதோ அங்கே அதற்கான தலைமை உருவாகும் அமைப்பில்தான் அரசுகள் தோன்றியிருக்க வேண்டும். மருதநில மக்களின் நிலைத்த வாழ்வும், நிலையான குடியிருப்பு அமைப்பும் நிலங்களின் விளைச்சலில் கிடைத்த அதிகப்படியான உபரியும் அரசுகள் தோன்றக் காரணமாக இருக்கலாம்.

**ஆதிக்க வளர்ச்சி, அரசு உருவாக்கம்**

வேளாண் சமூக அமைப்பிலும் அனைவருமே ஆதிக்கம் செலுத்தும் நிலையில் இல்லை. வலிமையும் படையும் கொண்ட ஒரு சிலரே ஆதிக்க நிலை எய்திக்கொண்டிருக்க ஏனையோர் உழைக்கும் வேளாண் குடிகளாகவே வாழ்ந்து வந்துள்ளமையைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். இந்தச் சமூகத்தில் தமிழ் மக்கள் உற்பத்தி சக்திகளுக்கும் தங்களுக்கும் உள்ள உறவு காரணமாக இரு பிரிவுகளாக பிரிந்தனர் ஒன்று நிலக்கிழார், மற்றொரு பிரிவினர் அவற்றில் உழைத்து பிழைக்கும் உழவர்கள். மார்கன், எங்கெல்ஸ், மார்க்ஸ் ஆகியோர் உற்பத்தி அடிப்படையும், வலிமை அடிப்படையுமே இனக்குழுத் தலைமைக்கும் அரசு தலைமைக்கும் அடிப்படை என்று விளக்கினார். பொருளாதார ஆதிக்கம் மிக்க குழு, அதனினும் குறைந்த இனக்குழுவைத் தனது வலிமையால் அடிமையாக்கிற்று என்பது அவர்தம் கோட்பாடு.

**தொகுப்புரை**

சமூகத்துடன் ஒன்றி வாழும் மக்களின் வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கியது. மக்களின் செயல்பாடுகளும் விதிமுறைகளையும் தங்களுக்கென்ற தனித்தன்மையுடன் உருவாக்கிக் கொண்டனர்.

உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் நிலம், விதையின் தன்மை பொருத்து மாறுபடும். அதில் மக்கள் ஈடுபட்டு தங்கள் வாழ்விற்கு ஏற்றவாறு நிலங்களை வகுத்துக் கொண்டனர். இதன் மூலம் மக்களின் வாழ்க்கை தரமும் பெருக ஆரம்பித்தது. இவற்றின் மூலமே பல ஊர்கள் உருவாக்கம் பெற்றது.

மக்கள் தங்களின் உழைப்பை மட்டுமே மூலதனமாக வைத்து உணவுகளை உற்பத்தி செய்தனர். இவற்றின் மூலமே சமூக அமைப்பும் உருவாக்கம் பெற்றது.

மக்கள் வாழ்வின் ஒரு அங்கமாகவே இருப்பது விழாக்களும், சடங்குகளுமே. இவற்றின் மூலமே மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் இணைந்து செயல்பட்டனர். இதன் முலம் ஒற்றுமை என்னும் பலம் மக்க ளிடையே உருவாகியது.

சடங்குகளின் அமைப்பில் திருமணமும் ஒரு சடங்காக மக்களிடையே நிகழ்த்தப்பட்டது. இவற்றின் முலமே குடும்பம் என்னும் சூழலை உருவாக்கினர்

பொருளாதார வளர்ச்சியின் ஆதிக்கம் பெற மக்களிடையே அரசும், நிறுவனமும் உருவாக ஆரம்பித்தது.

**முடிவுரை**

மக்கள்தாங்கள்வாழும்சூழ்நிலைகளைக் கொண்டே தங்களது சமூகத்தை அமைத்துக் கொண்டனர். மக்கள் வாழ்வின் ஒவ்வொரு செயலும் சமூகத்துடனே ஒன்றிணைந்து செயல்பட ஆரம்பித்தனர். நிலம், மக்கள், விழாக்கள், சடங்குகள், அரசு, நிறுவனம் இவற்றின் மூலமே தங்களுக்கென்ற ஒரு விதிமறைகளை உருவாக்கி, அதற்கேற்றவாரு தங்களது வாழ்வை மேம்படுத்திக் கொண்டனர். மனிதனும், சமூகமும் எப்பொழுதும் ஒன்றுடன் ஒன்று இணைந்தே தங்களது. வாழ்வியலை நடத்திக்கொண்டு வருகிறது. அக்கால சூழ்நிலையில் இருந்து இன்று வரை ஒரு பண்பாட்டு முறையின் இச்சமூக அமைப்பின் மூலமே அறிந்து கொள்ள முடியும்.

**துணைநூற்பாட்டியல்**

1. “மருதத்தில் மக்கள் வாழ்வியல்”” எ. பாலுச்சாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். 2011
2. “வாழ்வியல் நெறிகள்”” டாகடர் சி. பாலசுப்பிரமணியன், நறுமலர்ப் பதிப்பகம். 1990
3. “பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும”"சு, தேவநேய பாவாணர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1992
4. “தொல்காப்பியம் பொருளதிகாரம்”” இளம் புரணா உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். 1962
5. “சங்க இலக்கியத்தில் குடும்பம் உடைமை”” அ. ஆறுமுகம், பாவேந்தர் பதிப்பகம்.1994
6. “சமூகவியலும் இலக்கியமும்”” க. கைலாசபதி, நியு செஞ்சுரி புக் ஹவுஸ். 1988